Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 4 /2014

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : **சபரி கிருஷ்ணன்** | Father/Husband Name | : **சங்கரலிங்கம்** |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 06 day of 04.2026.

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது முத்தூட் பின்கார்ப்ல் நான்கு வருடங்களாக வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன், என்னிடம் தற்போது காட்டப்படும் வெங்கடேஷ்வரி க/பெ.மதியழகன் என்பவர் 28.06.2010ம் தேதி நகை லாக்கிட் உடன் கூடிய செயின், செயின், 2 மோதிரங்கள், கல் தோடு 2, சாதாரண தோடு 2 ஆக மொத்தம் 92 கிராம் மதிப்புள்ள நகையை எங்கள் கிளையில் அடகுவைத்துள்ளார். தோரயமாக ஒரு வருடம் கழித்து அடகு வைத்த நகையை ரசீது இல்லாமல் திருப்பியுள்ளார். அதற்கான ரசீது இதுவாகும். ( **அந்த ரசீது நகல் அசாஆ2 ஆக 2ம் எதிரி தரப்புல் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது** ). RBI சுற்றறிக்கையின்படி அனைத்து ஆவணங்களும் 10 வருடத்திற்கு ஒரு முறை அழிக்கப்படும்.

அதனால் இந்த ரசீதின் அசல் மற்றும் Indemnity Bondஎங்கள் நிறவனத்தில் இல்லை.

**எதிரிகள் ஆஜர்**

**2ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முத்தூட் பின்கார்ப்ல் எந்த வருடத்தில் பணியில் சேர்ந்தேன் என்றால் மேலூர் கிளையில் 2021ம் வருடம் பணியில் சேர்ந்தேன். முதல்விசாரணையில் சொல்லியுள்ள Indemnity Bondயை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொதுவாக குற்ற வழக்கில் நகைகளை எதிரிகளிடம் கொடுக்க கூடாது என்று சொல்லி வேண்டுதல் கடிதம் கொடுப்பார்கள், அதுபோன்று இவ்வழக்கில் ஏதேனும் வேண்டுதல் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. பொதுவாக ஒருவர் நகையை அடகு வைத்தால், அவர்கள் ரசீதுடன் பணம் கொடுத்தால் திருப்பி கொடுக்கப்படும் என்றால் சரிதான், ரசீது தொலைந்துவிட்டால் Indemnity Bond பெற்றுக்கொண்டு நகையை கொடுப்பது வழக்கம். நான் எங்கள் நிறுவனத்திலிருந்து இந்த வழக்கு சம்மந்தமாக Indemnity Bond பெறவில்லை, வேண்டுதல் கடிதம் பெறவில்லை, வழக்கிற்காக போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனறால். 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**( 1ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை. )**